## பூச்சிமருந்து பயன்படுத்தும்போது கவனிக்கவேண்டியவை

## Do's

- பூச்சி (அ) நோய் தாக்குதலை கண்காணித்து தேவைகேற்ப மருந்து தெளிக்கவும்.
- பரிந்துரைக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட மருந்துகளை மட்டும் தெளிக்கவும்.
- மருந்து கலன் மேல் உள்ள பரிந்துரைகளை கவனமாக பின்பற்றவும்.
- பரிந்துரைக்கப்பட்ட அளவு மருந்து மற்றும் தெளிப்பு நீரை உபயோகிக்கவும்.
- தெளிப்பான் மற்றும் தெளிப்பு முனைகளை சரியாக பராமரிக்கவும்.
- கலக்கப்பட்ட மருந்தை உடனடியாக உபயோகிக்கவும்.
- மருந்து தெளிக்கும்போது பாதுகாப்பு உடைகளை அணியவும்.
- தெளிக்கும் மருந்துகளை பற்றிய குறிப்புகளை பதிவு செய்யவும்.
- மருந்துகளை குழந்தைகளுக்கு எட்டாத இடத்தில் வைக்கவும்.
- மருந்துகளை பாதுகாப்பான மற்றும் குளிர்ந்த இடத்தில் சேமிக்கவும்.
- மருந்து தெளிக்க உபயோகித்த கொள்கலன்களை நன்றாக கழுவி வைக்கவும்.
- காலியான மருந்து கலன்களை சரியான முறையில் அப்புறபடுத்தவும் (குழிதோண்டி புதைத்துவிடவும்).
- கொட்டிய திரவ மருந்தை அப்புறபடுத்த மரத்தூள் அல்லது மணலை பயன்படுத்தியபின் சுண்ணாம்பு கரைசலை சேர்த்து நச்சு முறிவு செய்து புதைத்து விடவும்.
- மருந்து தெளித்த வயலில் கால்நடைகள் மற்றும் வளர்ப்பு பிராணிகள் செல்லாமல் பார்த்துக்கொள்ளவும்.
- எதிர்பாரத விபத்தின்போது உடனடியாக அருகாமையில் உள்ள மருத்துவரை அணுகவும்.

## Don’ts

- பதிவுசெய்யப்படாத, பரிந்துரைக்கபடாத மற்றும் தடை செய்யப்பட்ட மருந்துகளை உபயோகபடுத்தகூடாது.
- பரிந்துரைக்கப்பட்ட அளவிற்குமேல் பயன்படுத்தகூடாது.
- தொடர்ந்து ஒரே மருந்தை பயன்படுத்தகூடாது.
- இரண்டு ஒவ்வாத மருந்துகள்/உரங்கள்/நுண்நூட்டங்களை கலக்ககூடாது.
- மருந்துகளை அதற்குரிய கொள்கலனில் இருந்து வேறுகலனுக்கு மாற்றக்கூடாது.
- காலியான மருந்து கொள்கலன்களை வயலிலோ, நீர்நிலைகளிலோ எறியகூடாது.
- காலியான மருந்து கொள்கலன்களை பயன்படுத்தகூடாது.
- மருந்து தெளிக்கும்போது உணவு/நீர் அருந்துதலோ (அ) புகைபிடித்தலோ கூடாது.
- உடல்நிலை பாதிக்கப்பட்டபோது மருந்துகளை கையாளகூடாது.
- காலாவதியான மருந்துகளை பயன்படுத்தகூடாது.
- வெறும் கைகளால் மருந்துகளை கலக்கக்கூடாது.
- காற்றின் திசைக்கு எதிராக மருந்து தெளிக்ககூடாது.
- மீதமான மருந்தை வரப்பு ஓரத்திலோ (அ) மற்ற பயிரிலோ தெளிக்ககூடாது.